**நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள்**

**முன்னிலை. திரு.கா.மெகராஜ், இ.ஆ.ப**

ந.க.எண்867/2019/பே2 நாள். .08.2020.

பொருள் பணியாளர்குழு – பேரூராட்சிகள் நிர்வாகம் – சேலம் மாவட்டம் – தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் – தமிழ்நாடு அமைச்சுப் பணி – 2015–16, 2016–17 மற்றும் 2017–18 – ஆம் ஆண்டுகளுக்கான ஒதுக்கீட்டில் பேரூராட்சிகளின் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் பணியாளர்களுக்கு – பணி வரன்முறை செய்து ஆணையிடுதல் – தொடர்பாக.

பார்வை
1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களது கடிதம் எண்.926/PSD–C3/2019, நாள்.09.02.2019.
2. நாமக்கல் மாவட்ட ஆட்சி தலைவரின் செயல்முறை உத்திரவு ந.க.எண்– 867/2019/பே2 நாள்.28.02.2019.
3. சம்மந்தப்பட்ட பேரூராட்சி செயல் அலுவலர்களிடமிருந்து பெறப்பட்ட பணிச்சான்று அறிக்கைகள்.
4. அரசு ஆணை எண். 191 பொதுத் துறை நாள்.01.02.1962.
5. தொடர்புடைய ஆவணங்கள்.

******

ஆணை

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் சென்னை அவர்களின் பார்வை 1–இல் காணும் கடிதத்தில் 2015–16, 2016–17மற்றும் 2017–18ம் ஆண்டிற்கான தமிழ்நாடு அமைச்சு பணியில் உள்ள காலிப்பணியிடங்களில் இளநிலை உதவியாளர் பதவிக்கு தொகுதி 4–ன் கீழ் தேர்வு செய்யப்பட்டு நாமக்கல் மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பணியாளர்களுக்கு பார்வை 2–இல் காணும் நாமக்கல் மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் உத்திரவின்படி கீழ்க்கண்ட பேரூராட்சிகளில் இளநிலை உதவியாளராக பணியிடம் வழங்கப்பட்டு தனியர்கள் ஏதிரே குறிப்பிட்டுள்ள தேதியில் பணி சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்கள். பார்வை 3–இல் காணும் சம்மந்தப்பட்ட பேரூராட்சிகள் செயல் அலுவலர்களிடமிருந்து கீழ்க்காணும் பணியாளர்களின் மீது ஒழுங்கு நடவடிக்கை மற்றும் தண்டனைகள் ஏதும் நிலுவையில்லை எனவும் பணிச்சான்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

..2

| வ. எண் | பணியாளர்களின் பெயர் மற்றும் பதவி (திருவாளர்கள்) | பணி நியமனம் செய்யப்பட்ட பேரூராட்சியின் பெயர் | பணியில் சேர்ந்த நாள் | பணி வரன்முறை செய்யப்பட வேண்டிய நாள் |
|---|---|---|---|---|
| 1 | தரண்யா.எ<br>இளநிலை உதவியாளர் | அத்தனூர் பேரூராட்சி | 06.03.2019 மு.ப. | 06.03.2019 மு.ப. |
| 2 | சத்யா.சி<br>இளநிலை உதவியாளர் | வேலூர் பேரூராட்சி | 08.03.2019 மு.ப. | 08.03.2019 மு.ப. |
| 3 | அனுசுயா.எல்<br>இளநிலை உதவியாளர் | சேந்தமங்கலம் பேரூராட்சி | 06.03.2019 மு.ப. | 06.03.2019 மு.ப. |
| 4 | வீரமணி.பி<br>இளநிலை உதவியாளர் | நாமகிரிப் பேட்டை பேரூராட்சி | 04.03.2019 மு.ப. | 04.03.2019 மு.ப. |
| 5 | இக்னேஷியஸ்.எப்<br>இளநிலை உதவியாளர் | மோகனூர் பேரூராட்சி | 06.03.2019 மு.ப. | 06.03.2019 மு.ப. |

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வழியாக தேர்வு செய்து பணியமர்ந்தப்பட்டவர்கள் பணியில் சேர்ந்து கொண்ட நாள் முதல் பணிவரன்முறை செய்யப்பட வேண்டும் என பார்வை 4–இல் காணும் அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்காணும் அரசாணையின்படி, மேற்குறிப்பிட்ட பணியாளர்கள் தமிழ்நாடு அரசு பணியாளர்கள் தேர்வாணையம் மூலம் நியமனம் செய்யப்பட்டுள்ள பணியாளர்கள் என்பதால், தனியர்களின் பணியினை இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது. மேலும் தனியர்களின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவினை மேற்கொண்டு அதன் நகலினை இவ்வலுவலகத்திற்கு சமர்ப்பிக்குமாறு சம்மந்தப்பட்ட பேரூராட்சி செயல் அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

16/8/2020

மாவட்ட ஆட்சித் தலைவருக்காக,
நாமக்கல்.

பெறுநர்

16/8/2020

சம்மந்தப்பட்ட பணியாளர்கள்,
நாமக்கல் மாவட்டம் (செயல் அலுவலர் மூலமாக)

நகல். பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை–28 தகவலுக்காக
நகல். சம்மந்தப்பட்ட பேரூராட்சி செயல் அலுவலர், நாமக்கல் மாவட்டம்
நகல். “பே2“ இருக்கை –இருப்புக் கோப்புக்கு.